முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1050

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.08.2022, ஞாயிற்றுக்கிழமை

1. பிரம்ம ஞான மகா சூட்சுமமே
   பிரணவ சித்திமிகு மாதவமே
   வரம்பல பெற்று உலகை மீட்க வள்ளலாய்
   வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   ஆசிதனை சுபகிருது நள்ளி திங்கள்
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 29 நாள், 14.08.2022 ஞாயிற்றுக்கிழமை)
   அரங்கனுக்கு பலம் கூட உரைப்பேன்
3. வகைபட அரங்கனுள் யானிருந்து
   வையகத்தை மாற்றும் சேவையாக
   ஆகவே அன்னதானம் சுத்த சன்மார்க்கம்
   அறமாக உலகுக்கு வழிகாட்டி அருள
4. அருளுகின்ற அரங்கன் மார்க்கத்தை
   வழிமொழிந்து ஏற்கும் மக்கள் மூலமே
   தெளிவூட்டி உலகிற்கு ஞானபலத்தை
   தேசிகன் வழி ஞான ஆட்சிக்காலமாகவே மாற்றுவேன்
5. ஆகவே அரங்கனை தொடர்ந்து வந்து அகிலத்தார் ஞானம் பயில
   அனைவருக்கும் ஞானிகளாகும் வாய்ப்புக் கிட்டி
   கிட்டியே இந்த கலியுகம்
   குறையின்றி ஞானயுகமாக ஆற்றல் பெருகும்
6. பெருகவே கலியிடராக உலகை
   பேதமுற வதைக்கின்ற சகல சிக்கல்களும்
   தடையின்றி அகன்றோடி இந்த தரணி
   தர்மலோகமாக தவராஜன் சக்திமிகு ஞான லோகமாக மாற்றங்கண்டு
7. கண்டுமே சடுதி பேருலகமெல்லாம்
   கந்தவேலன் என் தலைமை ஏற்ற ஞான உலகமாக
   ஆற்றல்பட அரங்கன் சேவையால் அரங்கன் தொண்டர்களாலும்
   மாற்றம் இனிதே காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–